செ.வெ.எண்: 03/ஜனவரி நாள்: 04.01.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான தமிழக அரசின் விலையில்லா வேட்டி, சேலைகளை பயனாளிகளுக்கு மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட மஞ்சள்பட்டிணம், மேலச்சத்திரம், காட்டுபரமக்குடி ஆகிய பகுதிகளில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் 2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான தமிழக அரசின் விலையில்லா வேட்டி, சேலைகளை பயனாளிகளுக்கு 03.01.2016 அன்று வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் விதமாகவும், ஏழை, எளிய மக்கள் புத்தாடை உடுத்தி மகிழ்ச்சியுடன் பொங்கல் பண்டிகையினை கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்திலும் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு விலையில்லாமல் வேட்டி மற்றும் சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் 2016-ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை 28.12.2015 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இதன்படி 2016-ஆம் ஆண்டில் தமிழகத்தில் மொத்தம் ரூபாய் 486 கோடியே 36 இலட்சம் மதிப்பில் 1,68,04,986 சேலைகள் மற்றும் 1,67,89,404 வேட்டிகள் வழங்கப்படவுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சத்து 2 ஆயிரத்து 826 வேட்டி, சேலைகள் வழங்கப்படவுள்ளது. அவற்றில் பரமக்குடி வட்டத்திற்கு மட்டும் மொத்தம் 68 ஆயிரம் வேட்டி மற்றும் சேலைகள் வழங்கப்படவுள்ளன. பொதுமக்களுக்கு வழங்கப்படும் இந்த வேட்டி மற்றும் சேலைகள் கைத்தறி நெசவாளர்களின் மூலம் தரமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பொதுமக்களுக்கு விலையில்லா வேட்டி மற்றும் சேலைகளை பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் விலையில்லா வேட்டி, சேலைகள் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர தமிழகத்தில் ஏழை, எளிய பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், அவர்களுக்கு கல்வி கற்கும் ஆர்வத்தினை ஊக்குவித்திடும் வகையில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமண உதவித்தொகையாக ரூபாய் 25 ஆயிரத்துடன் விலையில்லாமல் 4 கிராம் தங்கம் மற்றும் பட்டம் மற்றும் பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு திருமண உதவித்தொகையாக ரூபாய் 50 ஆயிரத்துடன் விலையில்லாமல் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டமும், பெண்கள் தங்களின் பொருளாதாரத்தை உயர்த்திடும் விதமாக விலையில்லா கறவை மாடு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், தாய் மற்றும் சேயினை நலமாக பேணும் வகையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் மற்றும் அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம், இல்லத்தரசிகளின் பணிச்சுமையைக் குறைத்திடும் வகையில் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் என பெண்களுக்கு பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏற்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மக்கள் நலனை மேம்படுத்திடும் விதமாக தமிழக அரசு தொடர்ந்து பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி வட்டாட்சியர் திரு.இமானுவேல் ராஜசேகர், முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.இரா.தர்மர், கூட்டுறவு வீட்டுவசதி சங்க துணைத்தலைவர் திரு.கணேசன், நகர்மன்ற உறுப்பினர்கள் திரு.கனகராஜ், திரு.பாக்கியம், திரு.மாலிக், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.ரஜினிகாந்த் அரசு அலுவலர்கள், கூட்டுறவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**